-4-10-1993

Registered as a Newspaper　　பக்கங்கள் 04　　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　மக்கள் தினசரி　　Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　புரட்டாதி 18　　[04-10-1993]　　திங்கட்கிழமை　　ஓலை 228

## நிவாரணத்துக்கு வழங்கிய அரிசி அதிகரித்த விலைக்கு விற்பனை

யாழ். கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரால் வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட தரமான ''M பச்சை'' அரிசி மேற்படி சங்க மக்கள் கடைகள்மூலம் கச்சேரி நிர்ணயித்த விலையிலும் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இடம் பெயர்ந்தோரின் ஆவணி இறுதி இருவார உலர் உணவு விநியோகத்திற்கென வழங்கப்பட்ட அரிசியே கிளைகளிலிருந்து சங்க நிர்வாகத்தால் மீளப் பெறப்பட்டு அதிகரித்த விலையில் மக்கள் கடைமூலம் விநியோகம் செய்யப்பட்டுவருவதாக தெரியவருகிறது. கச்சேரி இவ்வகை அரிசிக்கு கிலோ 17 ரூபா 50 சதம் என விலை நிர்ணயம் செய்துள்ள போதிலும் மேற்படி சங்க மக்கள் கடைமூலம் 8ரூபா 50 சதம் அதிகரித்த விலையில் கிலோ 26 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இதேவேளை சங்க பாவனையாளருக்கு மேற்படி அரிசிக்குப் பதிலாக ''அம்மா பச்சை'' அரிசி வழங்கப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கிளாலியில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி

# 5 படையினர் பலி; இருவர் காயம்

### [illegible]

[குருநகர்]

ஆனையிறவுப் பகுதியில் இருந்து மண்டைதீவு நோக்கி நேற்றுக்காலை 7.00 மணியளவில் வந்த உலங்கு வானூர்தியொன்று பூநகரி-கல்முனை மற்றும் பூவரசந்தீவு - மணித்

[4ஆம் பக்கம் பார்க்க]

### அரிசி விலை மாற்றம்

கடந்த முதலாம் திகதி தொடக்கம் அரிசியின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ் விலை மாற்றங்க

[4ஆம் பக்கம் பார்க்க]

## அனுராதபுர ஆஸ்பத்திரியில் 81 ராணுவத்தினர் சடலங்கள்

யாழ்தேவி ராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட 150ற்கும் கூடுதலான சிறிலங்கா இராணுவத்தினரில் 81 பேரின் சடலங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

மேலும் படுகாயமடைந்த பலர் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவர்களும் தாதிகளும் இல்லாமலிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து மேலதிகமாக மருத்துவர்களும் தாதிகளும் அனுராதபுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த இராணுவத்தில் 115பேர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த இராணுவ நடவடிக்கையில் 20,000 இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். ஆயினும் இரு நாட்களிலும் கூடியளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவையாகும் என இராணுவ அதிகாரி ஒருவர்கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கென சகல விமானங்களும் யாழ். அனுப்பப்பட்டன என விமானப்படை அதிகாரி ஒருவர் கூறியதாகவும் கிழக்கு மாகாணத்திலிருந்துஇந்த இராணுவ நடவடிக்கைக்கு படையினர் அனுப்பப்பட்டிருந்ததாகவும் அவ் அதிகாரியை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## தென்மராட்சி பகுதியில் தொடரும் குண்டுவீச்சு

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நேற்று கொடிகாமம் பிரதான [illegible] நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் வீடு ஒன்று சேதமடைந்தது. வெளிக்காணிக்ளில் வீசப்பட்ட மூன்று குண்டுகளும் விழுந்துவெடித்த [illegible]

## இரு ராணுவ வாகனங்கள் சேதம்

(கொழும்பு)

**கிளாலிப் பகுதியில், விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிய ஐந்து சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். இச் சம்பவத்தில், இரண்டு ராணுவ வாகனங்களும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் கிளாலிப் பகுதி நோக்கி வந்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் இரண்டு வாகனங்கள் கண்ணிவெடியில்சிக்கி சிதறியதாகவும், இதனால் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மேலும் இருவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிறிலங்கா வானொலி அறிவித்தது.

இதேவேளை நேற்று முன்தினம் இப் பகுதியில் இடம்பெற்ற மோதலொன்றில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர் எனவும் நால்வர் காயமடைந்தனர் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## கிளாலியில் தரிப்பது குறித்து முடிவு எதுவும் இல்லையாம்

(கொழும்பு)

கிளாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் தரித்து நிற்பதா அல்லது பின்வாங்கிச் செல்வதா என்பது குறித்து சிறிலங்கா இராணுவ தரப்பில் இதுவரை முடிவெடுக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விடயம் குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிளாலிப் பகுதியில் தொடர்ந்தும் படையினர் தரித்து நிற்பதாய் இருந்தால் பெருமளவு இராணுவ பலம் தேவைப்படும். அத்துடன் மிகவிரைவில் ஆரம்பிக்க இருக்கும் பருவ மழையால் ஏற்படக்கூடிய கஷ்டங்களும் படையினர் தொடர்ந்தும் அப்பகுதியில் தரிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் காரணியாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் தமிழர் விபரம் மீண்டும் திரட்ட முடிவு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தங்கியிருக்கும் ஒருலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் தொடர்பான விபரங்களை புதிதாகத் திரட்ட முடிவு செய்து இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து சென்று கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசித்து வரும் இத் தமிழ் மக்களில் 90 சதவீதமானவர்கள் போலியான தகவல்களையே வழங்கியுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

கொழும்பில் வசித்துவரும் இவர்களின் தகவல்கள்தொடர்பாக பரீட்சித்துப் பார்த்தபோது இவ் விடயம் தெரியவந்ததாகவும் இதனையடுத்தே இவ்வாறான முடிவுக்கு வந்ததாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் ''லங்கா தீப'' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பலர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டபோது 500 பேரளவில் போலியான தகவல்களைக் கொடுத்து தங்கியிருந்தமை தெரியவந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'யுனிசெப்' பிரதிநிதி யாழ். வரவுள்ளார்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள வட பகுதி மக்களின் சுகாதார மருத்துவ சேவைகளை கவனிப்பதற்கென புதிதாக மருத்துவ சேவை நிறுவனங்களை அமைப்பதற்கு யுனிசெப் நிறுவனம் முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கு கூடுதலான மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனால்அந்ததேவைகள் போதுமான அளவு அவர்களுக்கு கிடைக்கவில்லை. வடக்கு கிழக்கு பகுதிகளில் இயங்கும் வைத்தியசாலைகளுக்குத் தேவைப்படும் குழந்தை நோய்களுக்கான தடுப்புமருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் [illegible]

பலர் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவர்களும் தாதிகளும் இல்லாமலிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து மேலதிகமாக மருத்துவர்களும் தாதிகளும் அனுராதபுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த இராணுவத்தில் 115பேர் கொழும்பு

வையாகும் என இராணுவ அதிகாரி ஒருவர்கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கென சகல விமானங்களும் யாழ். அனுப்பப்பட்டன என விமானப்படை அதிகாரி ஒருவர் கூறியதாகவும் கிழக்கு மாகாணத்திலிருந்துஇந்த இராணுவ நடவடிக்கைக்கு படையினர் அனுப்பப்பட்டிருந்ததாகவும் அவ் அதிகாரியை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## தென்மராட்சி பகுதியில் தொடரும் குண்டுவீச்சு

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நேற்று கொடிகாமம் பிரதான வீதிப்பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின.

பகல் 1.15 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் வீடு ஒன்று சேதமடைந்தது. வெளிக்காணிகளில் வீசப்பட்ட மூன்று குண்டுகளும் விழுந்துவெடித்ததினால் பெருமளவு சேதம் ஏற்படவில்லை.

இதேவேளை இவ் விமானங்களுடன் கூடவேவந்த உலங்கு

[4ஆம் பக்கம் பார்க்க]

## குறைந்தளவு பயணிகளே வடக்கே செல்ல அனுமதி

[யாழ்ப்பாணம்]

வவுனியா நகரிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இருபதிற்கும்உட்பட்ட பயணிகளையே வடக்கு நோக்கிச் செல்ல இராணுவம் அனுமதித்தது.

ஓமந்தையைச் சேர்ந்தவர்களும், அதை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களுமே வந்தவர்களில் அடங்கும் என்று அறியப்படுகிறது

வெளிமாவட்டங்களைச் சேர்ந்தஎவரும் வடக்குநோக்கி வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை என தெரியவருகிறது.

## மண்ணெய் லொறி மீது ஹெலி றொக்கட் தாக்குதல்

(வடமராட்சி)

வல்லை வீதியில் நேற்று காலை 8 15 மணியளவில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றின் மீது உலங்குவானூர்தி அடுத்தடுத்து பல றொக்கட் தாக்குதலை மேற்கொண்டது.

பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிச் சென்ற நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான லொறி மீது றொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. றொக்கட் குண்டுகள் வெளிப்பகுதிகளில் விழுந்து வெடித்தன.

முகிலுக்குள் மறைந்துவந்துகொண்டிருந்த இந்த உலங்குவானூர்தி திடீரென தாக்குதலை மேற்கொண்டதையடுத்து லொறியில் சென்றவர்கள் லொறியை விட்டு ஓடி முனியப்பர் ஆலயத்திற்குள் மறைந்து கொண்டனர். உலங்குவானூர்தி ஆறு தடவைகள் வட்டமிட்டவாறு பலத்த தாக்குதலை மேற்கொண்டது. தாக்குதலை மேற்கொண்ட பின்னரும் இரண்டு தடவைகள் அப்பகுதியை வட்டமிட்டுவிட்டு பலாலி நோக்கிச் சென்றது. லொறியும் லொறியில் சென்றவர்களும் தப்பித்துக் கொண்டனர். [யோ]

## பல்கலைக் கழக அனுமதி வெட்டுப்புள்ளி அடுத்தவாரம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் அடுத்த கல்வி ஆண்டுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கானவெட்டுப்புள்ளி அடுத்த வார இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு பகுதி மாணவர்களுக்கு பல்கலைக் கழக அனுமதி வழங்குவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தகுதியான மாணவர்கள் மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

நோக்கி வந்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் இரண்டு வாகனங்கள் கண்ணிவெடியில்சிக்கி சிதறியதாகவும், இதனால் ஐந்து

வர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிறிலங்கா வானொலி அறிவித்தது.

பெற்ற மோதலொன்றில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர் எனவும் நால்வர் காயமடைந்தனர் எனவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

# கிளாலியில் தரிப்பது குறித்து முடிவு எதுவும் இல்லையாம்

(கொழும்பு)

கிளாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் தரித்து நிற்பதா அல்லது பின்வாங்கிச் செல்வதா என்பது குறித்து சிறிலங்கா இராணுவ தரப்பில் இதுவரை முடிவெடுக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விடயம் குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிளாலிப் பகுதியில் தொடர்ந்தும் படையினர் தரித்து நிற்பதாய் இருந்தால் பெருமளவு இராணுவ பலம் தேவைப்படும். அத்துடன் மிகவிரைவில் ஆரம்பிக்க இருக்கும் பருவ மழையால் ஏற்படக்கூடிய கஷ்டங்களும் படையினர் தொடர்ந்தும் அப்பகுதியில் தரிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் காரணியாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ தந்திரோபாயத்தை பரீட்சிக்கும் முயற்சி

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழப்புகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பலத்தையும் உறுதிப்பாட்டையும் இராணுவம் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறு முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலகா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மேலும் வடக்கு நோக்கி குறிப்பாக விடுதலைப் புலிகளின் கொத்தளமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் ஊடுருவுவது சாத்தியமில்லை. அவ்வாறு முன்னேறிச் செல்வதற்கு மேலும் கூடுதலான ஆட்பலமும் திட்டமிடலும் தேவை, அல்லாவிட்டால் ஆயிரக்கணக்கான குடிமக்கள் பலியாவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைவிட இராணுவத் தீர்வையே அரசு விரும்புகிறது என்பதைக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இதேவேளை ஜனாதிபதி விஜேதுங்கா தனது இராணுவத் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்திப் பார்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அவர்கள் கடந்தகாலத் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பதே மிகவும் வேதனை தருகிறது என்று அரசியல் ஆய்வாளரான ஜெயதேவ உயஸ்கொட கூறியிருக்கிறார்.

இந்த இராணுவ நடவடிக்கை தொடருமேயானால் தனிநாட்டைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என தமிழ் மக்களைப் பார்த்து விடுதலைப் புலிகள் சொல்லப் போகிறார்கள். தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசியல் முனையில் எதுவுமே நடக்கவில்லை ஒரே ஸ்தம்பித நிலையே காணப்படுகிறது என்று உயஸ்கொட மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசகட்டமைப்பு மையத்தை புலிகள் தாக்கலாமென அச்சம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அரசகட்டமைப்பின் மையப் பகுதிக்கு தமது தற்கொலைப் படையினைப் பயன்படுத்தி தாக்குதல் நடாத்தக்கூடுமென்று அரச அதிகாரிகள் அச்சமடைந்துள்ளனர்.

இதனால் தலைநகர் கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

பல் வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன

# சமாதான தீர்வு என்பது அரசின் திட்டத்தில் இல்லை

### பி. பி. ஸி. தெரிவிப்பு

[கொழும்பு]

தற்போதைய சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு என்பது அரசின் திட்டத்தில் இல்லை. இவ்வாறு பி. பி. ஸியின் செய்தி விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதியின் கடும்போக்கு கருத்துக்களும், தற்போதைய அரசின் நடவடிக்கைகளும் இராணுவத் தீர்விலேயே அரசு அதிகம் ஆர்வம் காட்டுவதாக தெரிகிறது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து சென்று கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசித்து வரும் இத்தமிழ் மக்களில் 90 சதவீதமானவர்கள் போலியான தகவல்களையே வழங்கியுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள

''லங்கா தீப'' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பலர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டபோது 500 பேரளவில் போலியான தகவல்களைக் கொடுத்து தங்கியிருந்தமை தெரியவந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'யுனிசெப்' பிரதிநிதி யாழ். வரவுள்ளார்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்களின் சுகாதார மருத்துவ சேவைகளை கவனிப்பதற்கென புதிதாக மருத்துவ சேவை நிறுவனங்களை அழைப்பதற்கு யுனிசெப் நிறுவனம் முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் வடபகுதியில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலைகளால் பொது மக்களுக்கு கூடுதலான மருத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனால்அந்ததேவைகள் போதுமான அளவு அவர்களுக்கு கிடைக்கவில்லை. வடக்கு கிழக்கு பகுதிகளில் இயங்கும் வைத்தியசாலைகளுக்குத் தேவைப்படும் குழந்தை நோய்களுக்கான தடுப்புமருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துவகைகளைச் சிறிலங்கா அரசினூடாக யுனிசெப்

[4ஆம் பக்கம் பார்க்க]

# தென்மராட்சியில் எரிகுண்டு வீச்சு

[கச்சாய்]

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கோமர் காட்டுப்பகுதி மீது சிறிலங்கா வான் படை விமானங்கள் எரிகுண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்றுஇரவு 7.30 மணியளவில் மேற்படி பகுதிக்கு வந்த விமானங்கள் பல தடவை எரிகுண்டுகளை வீசித் தாக்குதலை நடாத்தின இதனால் மேற்படி பகுதியில் உள்ள குடியிருப்புகளும் பற்றைக் காடுகளும் நள்ளிரவு வரை எரிந்தவண்ணமிருந்தது. இதனால் அப்பகுதி முழுவதும் ஒளி வெள்ளம் பரவி பகல் போன்று காட்சியளித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் நேற்று இரவு தென்மராட்சிப் பகுதியில் வான் படையினரின் நடமாட்டம் அதிகரித்துக்காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு

கடந்த 28 ம் திகதி நடைபெற்ற புலோப்பளை சமரின் போது விழுப்புண் அடைந்த விடுதலைப்புலிகள் போராளி லெப்டினன்ட்மதிவாணன் விபுலன் [நடராசலிங்கம் கலைச்செல்வன், திருக்கோணமலை, தற்போதைய முகவரி அரியாலை யாழ்ப்பாணம்] என்பவர் நேற்று முன்தினம்இரவு 8. 30 மணியளவில் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த இப்போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



லெப்டினன்ட் மதிவாணன் (விபுலன்)

# மக்கள் மீது குண்டு வீச்சு வன்னி அமைப்புகள் கண்டனம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்திலும், யாழ் மாவட்டத்திலும் சிறிலங்கா விமானப்படையினர் பொதுமக்கள்மீது நடாத்திய தாக்குதல்களை வன்னிப் பிராந்திய பொது அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போதும், முல்லைத்தீவில் மாத்தளன் பகுதியிலும் பொதுமக்கள்மீது நடாத்தப்பட்ட தாக்குதலின்போது பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதைக் கண்டித்து துண்டுப் பிரசுரம் ஒன்றையும் இப்பொது அமைப்புக்கள் வெளியிட்டுள்ளன. இத்துண்டுப்பிரசுரத்தில் இவ்வாறான தாக்குதல்களை கண்டித்துள்ளதுடன் இத்தாக்குதல்களை நிறுத்தும்படியும் சிறிலங்கா அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதை சுமார் 13 பொதுசன அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ளன.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

அரசடி றோட் பரஞ்சோதி கராஜிற்கு முன்பாக க. மோகனராஜ் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம்காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

# கண்டியில் சோதனை தீவிரம் தமிழர்கள் பலர் கைது

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் பிரதான நுழைவாயில்களில் பொலிஸ் மற்றும் இராணுவம் கூட்டாக சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், ஏனைய பரிசோதனைகளுக்கு விசேட பொலிஸ் அணி பயன்படுத்தப்படுவதாகவும் மத்திய மாகாண பாதுகாப்புக்கான இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் பேராதனை, கடுகஸ்தோட்ட, பென்தென்குபுர, அம்பிட்டிய, அத்தான ஆகிய பிரதான பாதைகளில் இராணுவ பொலிஸ் விசேட அணியும் கண்டி தலதா மாளிகை உட்பட ஏனைய பௌத்த விகாரைகளுக்கு விசேட பொலிஸ் அணியும் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சந்தேக நபர்கள் கண்டி நகரில் பிரவேசிப்பது தொடர்பான விசாரணை மேற்கொள்ளவும், சந்தேக நபர்களை கைது செய்வதற்கும் பல பொலிஸ் அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன இந்த விசேட அணிக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லக்ஸ்மன் செனவிரத்தினா தலைமைதாங்குகின்றார்.

இந்த அணியினால் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டிருப்பதுடன் அண்மையில் கனடாவிலிருந்து இலங்கை திரும்பிய நான்கு தமிழ் இளைஞர்களை பேராதனையில் வைத்து கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வரி விளம்பரம்

**"கொழும்பில் கல்யாணம்"**

இந்து மகளிர் கல்லூரி பொன் விழாவில் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் 'முதலாம் பிள்ளை' 30/- (6210)

**வாங்கப்படும்**

நன்றாகக் காய்ந்த எலுமிச் சங்கோது [பூஞ்சணம் பிடிக்காத] 1கிலோ 75 - ரூபாவுக்கு வாங்கப்படும். கந்தசாமி அன் சன்ஸ் NO - 15 ஆடியபாதம் வீதி, நல்லூர். (6120)

**"சக்தி"**

''சக்தி'' ஓர் இயற்கைப் பசளை. வேப்பமிலைப் பழுத்தலும் மாட்டுச் சாணமும் சலமும் கொண்டு தயாரித்த கூட்டெரு. பைக்கற் ஒன்று ரூபா 9-. 100 பக்கற் ரூபா 800/- மட்டுமே. வீட்டுத் தோட்டம், பூந்தோட்டங்களுக்கு ஓர் வரப்பிரசாதம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. 'மில்க்வைற்' (சி/7538)


## கருத்தரங்கு ஆரம்பம்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் கரவெட்டி ராந்திய சபையால் கடந்த 29ஆம் திகதி கூட்டுறவுப் பரிசோதகர் தேர்வு விண்ணப்பதாரர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இன்று திங்கள் முதல் வாரந்தோறும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் பிற்பகல் 4 மணிக்கு கூட்டுறவுத்துறை அறிஞர்களால் விரிவுரைகள் வழங்கப்படவுள்ளன. விரிவுரைகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் நெல்லியடி கொடிகாமம் வீதியில் உள்ள பிராந்தியசபை பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் தெரிவிக்கிறார். (யோ)

## வீரவணக்கக் கூட்டம்

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் இராணுவக் காவலரண்களையும், இரு மினி முகாம்களையும் தகர்த்து வீரச்சாவு எய்திய மன்னார் மாவட்ட விசேட தளபதி லெப். கேணல் சுபன் உட்பட ஒன்பதாம் மாதத்தில் வீரச்சாவடைந்த முப்பது மாவீரர்களையும் நினைவு கூரும்முகமாக கடந்த வியாழனன்று மடுவட்டப் பகு...

# அரச, சார்பற்ற நிறுவன வாகனங்கள் நடமாடத்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளில் அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் வாகனங்கள் நடமாட சிறிலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் உத்தியோக பூர்வ அறிவிப்பு ஒன்று இதனைத் தெரிவிக்கின்றது. மேற்படி அறிவிப்பு யாழ் அரச அதிபர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதிடை ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளை எக்காரணம் கொண்டும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களின் வாகனங்கள் வீதிகளில் நடமாடினால் தாக்குதலிற்குள்ளாக்கப்படும். அது தவிர்க்க முடியாதது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதிகளின் உணவு லொறி ஒன்று நீர்வேலிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் உலங்கு வானூர்தி ஒன்றின் தாக்குதலிற்கு இலக்கானதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் யாழ். அரச அதிபர் சில அத்தியாவசிய தேவைகளிற்கு வாகனங்கள் வீதியால் செல்ல அனுமதிக்கும்படி கோரி பாதுகாப்புஅமைச்சுக்கு தகவலொன்று அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். (பா)

# இடம் பெயர்ந்தோர் குறித்து யாழ். அரச அதிபர் கவலை

[நமது நிருபர்]

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்களின் நிலை குறித்து யாழ். அரச அதிபர் கவலை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் அரச அதிபர் பணிமனையில் யாழ். அரச அதிபரைச்சந்தித்த எமது நிருபரிற்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பச்சிலைப்பள்ளி மற்றும் தென்மராட்சிப் பகுதியில் இருந்து சுமார் 600 தொடக்கம் 800 வரையான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன எனவும் இவர்களில் பலர் தீவுப் பகுதிகள் மற்றும் சில பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் குடியமர்த்தப்பட்டிருந்தனர் எனவும் இவர்கள் சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் சாவகச்சேரியில் பொது இடங்களில் தங்கியுள்ளனர் எனவும் இவர்களுக்கு இரண்டு வாரங்களிற்கு தேவையான உலர் உணவு விநியோகிக்க தாம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும். மேலும் இடம் பெயர்ந்தோருக்கு தேவையான உதவிகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட உதவி அரச அதிபர்களிற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் இப்படி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டால் யாழ். குடாநாடு முழுவதும் ஒரு காலத்தில் அகதிமுகாம்களாக மாறும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் அவர் நமது நிருபரிடம் கவலை தெரிவித்தார். [பா]

# மட்டுவிலில்கத்தி வெட்டு; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கத்தியால் வெட்டுண்டு படுகாயமடைந்த தாயும் மகனும் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் மட்டுவிலில் நடந்தது.

சுப்பர் வள்ளிப்பிள்ளை சுப்பர் இரத்தினசபாபதி (வயது 34) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இச் சம்பவம் பற்றி வெட்டுக்காயத்துக்கு இலக்கான இரத்தினசபாபதி தெரிவிக்கையில்; தான் படுத்திருந்தபோது தன்னை தனது தமயன் வெட்டியதாகவும் தனது கூக்குரலைக் கேட்டு தாயார் ஓடி வந்து தடுத்தபோது அவரும் வெட்டுக் காயத்துக்கு இலக்கானதாகவும் தெரிவித்தார். (சி)

# 'கோடா'வைக் குடித்த யானைகள் அட்டகாசம் புரிந்தன

## ஒருவ பலி; பலர் காயம்

(அநுராதபுரம்)

கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானைகள் கோடாவைக் குடித்ததும் போதை ஏறிய நிலையில் பெரும் அட்டகாசம் புரிந்தமையால் தோட்டங்கள் அழிக்கப்பட்டதுடன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் அண்மையில் அநுராதபுரம் நகரிலிருந்து பதினொரு மைல் தொலைவிலுள்ள நாச்சிக்கட்டுவ குடியேற்ற நகருக்கு அண்மையிலுள்ள கலுவில கிராமத்தில் நடந்துள்ளது.

வரட்சி காரணமாக குடிநீர் அற்ற நிலையில் காட்டு யானைகள் கிராமத்திற்குள் புகுந்ததாகவும், அப்போது கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த கோடா' மூன்று பீப்பாக்களின் இருப்பதைக் கண்டு அதைக் குடித்ததாகவும் இதனையடுத்து இவ் விபரீத சம்பவம் நேரிட்டதாகவும் கூறப்படுகிறது.

வெறி பிடித்த யானைகளின் அட்டகாசத்திலிருந்து தப்புவதற்காக பயந்து ஓடியவர்களில் பலரும் படுகாயம் அடைந்தனர் எனவும் யானைகளால் மிதியுண்டு கிடோகமவைச் சேர்ந்த பிரேமசிறி (40 வயது) கொல்லப்பட்டதாகவும் மேலும் கூறப்படுகிறது

# இடம் பெயர்ந்தோர் நிவாரணம் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் ''ஒப்பரேசன் யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணம் சம்பந்தமாகவும், கொலரா நோய்த்தடுப்பு சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று தலைமைச் செயலக மண்டபத்தில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலிற்கு சகல திணைக்களத் தலைவர்களும், பிரதேசசெயலர்களும், அரசசார்பற்ற பிரதிநிதிகளும் தவறாது சமுகம் தருமாறு யாழ். அரச அதிபர் கேட்டுக்...

# திணைக்களங்களுக்கு பணம் புதிய முறையில் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான இரு வங்கிகளும், திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு தேவைப்படும் பணத்தை முன் கூட்டியே கொடுத்துவிட்டு பின்னர் திறைசேரியிடமிருந்து அவற்றை அறவிடும் புதிய நடைமுறையொன்று இம்... படுகிறது.

திறைசேரியிடமிருந்து தமக்குத் தேவையான பணத்தைப் பெற்று வங்கியில் வைப்புச் செய்த பின்னரே வங்கிகள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு நிதி வழங்குவதே பழைய நடைமுறை...


# 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
31-06-1973

வீரச்சாவு
21-08-1993

**கப்டன் அன்பு**
[கந்தசாமி கண்ணதாசன்]

நீங்காத நினைவலைகள்
எம்நெஞ்சில் அலைமோத
கண்ணாவே நீர்எம்மை
விட்டோடிச் சென்றீரோ
கண்ணின் மணிபோல
காத்தோமே உமையெலாம்
தமிழீழம் காக்கவென்று
தரணியிலே பிறந்தீரே
கப்டன் அன்புஎன்ற
காரணப் பெயர்பெற்றீரே
உமதுஉயிர் அழியவில்லை
உமதுபுகழ் அழியாது

உங்கள் நினைவில் வாடும்
அப்பா அம்மா, அண்ணா, மாமா, மாமிஅம்மம்மா, சித்தி, சித்தப்பா பெரியப்பா, பெரியம்மா, உடன் பிறவாச்சகோதரர்கள், மச்சான், மச்சியர், நண்பர்கள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (6203)

தோறும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் பிற்பகல் 4 மணிக்கு கூட்டுறவுத்துறை அறிஞர்களால் விரிவுரைகள் வழங்கப்படவுள்ளன. விரிவுரைகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் நெல்லியடி கொடிகாமம் வீதியில் உள்ள பிராந்தியசபை பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் தெரிவிக்கிறார். (யோ)

### வீரவணக்கக் கூட்டம்

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் இராணுவக் காவலரண்களையும், இரு மினி முகாம்களையும் தகர்த்து வீரச்சாவு எய்திய மன்னார் மாவட்ட விசேட தளபதி லெப். கேணல் சுபன் உட்பட ஒன்பதாம் மாதத்தில் வீரச்சாவடைந்த முப்பது மாவீரர்களையும் நினைவு கூரும்முகமாக கடந்த வியாழனன்று மடுவட்டப் பகுதியில் பாலம்பிட்டி கிராமத்தில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. மடுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் அல்வின் தேசியக்கொடியை ஏற்றி வைத்த ஆரம்ப நிகழ்ச்சியைத் தொடர்ந்து நிகழ்ச்சிகளும், விளையாட்டுக்களும் இடம் பெற்றன. இரவு ஏழு மணியளவில் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதோடு வீரவணக்க கூட்டமும் இடம்பெற்றது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### ஓய்வூதிய கொடுப்பனவு

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு 4ஆம் திகதி திங்கட்கிழமை (இன்று) தொடக்கம் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேறபடி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படும் என அதன் முகாமையாளர் திரு து. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். [22]

### நடமாடும் சேவை

யாழ் மாவட்டத்தில் மாவட்ட கணித விஞ்ஞான மூலவளநிலையத்தின் மூன்றாவது நடமாடும் சேவை அண்மையில் யா சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. ஆண்டு 10, 11 இல் 400 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட மேற்படி பாடசாலை சகல மாணவர்களையும் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்திற்கு விசேட செயலமர்வுகளிற்கு அழைத்து வர முடியாத நிலையில் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தினரின் முழு நாள் சேவையை தமது பாடசாலையிலேயே சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர். செயலமர்வு செயற்பாடுகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

(யாழ்ப்பாணம்)

கத்தியால் வெட்டுண்டு படுகாயமடைந்த தாயும் மகனும் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் காலை 8. 00 மணியளவில் மட்டுவிலில் நடந்தது.

சுப்பர் வள்ளிப்பிள்ளை சுப்பர் இரத்தினசபாபதி (வயது 34) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இச் சம்பவம் பற்றி வெட்டுக்காயத்துக்கு இலக்கான இரத்தினசபாபதி தெரிவிக்கையில்; தான் படுத்திருந்த போது தன்னை தனது தமயன் வெட்டியதாகவும் தனது கூக்குரலைக் கேட்டு தாயார் ஓடி வந்து தடுத்தபோது அவரும் வெட்டுக் காயத்துக்கு இலக்கானதாகவும் தெரிவித்தார். (சி)

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் ''ஒப்பரேசன் யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணம் சம்பந்தமாகவும், கொலரா நோய்த்தடுப்பு சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று யாழ். அரசாங்க அதிபரின் தலைமைச் செயலக மண்டபத்தில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலிற்கு சகல திணைக்களத் தலைவர்களும், பிரதேசசெயலர்களும், அரச சார்பற்ற பிரதிநிதிகளும் தவறாது சமுகம் தருமாறு யாழ். அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## பருத்தித்துறைகுண்டுவீச்சில் இரு பொதுமக்கள் காயம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை முனை கடற்கரையில் பொம்பர் விமானம் நடாத்திய திடீர் தாக்குதலில் மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைக்கு வந்திருந்த தந்தையும், மகனும் படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பருத்தித்துறைப்பகுதியை நோக்கிவந்த இரு பொம்பாகளில் ஒன்று முனைக்கடற்கரைப் பகுதியில் ஒருகுண்டைவீசியது அப்போது மீன்பிடிக்கும் கூடு ஒன்றைக் கட்டுமரத்தில்கட்டிக்கொண்டிருந்த அ அந்தோனிப்பிள்ளை என்பவரும் அவருடன் கூட நின்ற அவரது மகனான றூபன் (வயது 10) என்பவரும் காயமடைந்தனர். (25)

## எமது மண்ணை ஆக்கிரமிக்க எதிரி முயற்சிக்கின்றான்

### அரசண்ணா பேச்சு

(வடமராட்சி)

எமது மண்ணை சிங்கள அரசு பறித்தெடுத்து இந்த மண்ணின் இனம் சிங்களமாகவும், மதம் பௌத்தமாகவும் ஆக்கிக்கொள்ள முயல்கிறான்.

இயக்கச்சிப் பகுதியில் எதிரியுடன் இறுதிவரை போராடி வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்களில் 19 பேருக்கு நெல்லியடிச்சந்தியில அஞ்சலி வைபவம் நடைபெற்ற போது யாழ் மாவட்ட அரசியல் பள்ளிப் பொறுப்பாளர் திரு.அரசண்ணா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, இந்த மண்ணில் இருக்கின்ற மக்கள் சுதந்திரக் காற்றில் வாழ வேண்டுமென்பதற்காக தங்களது மூச்சை நிறுத்திக் கொண்டவர்கள் இந்த மாவீரர்கள் காலத்தின் கடமை கண் முன்னே எழுந்து நிற்கின்றது. இந்த கட்டளையை நிறைவேற்ற வேண்டிய நிலையும் இருந்தது.

எதிரி இந்த மண்ணை ஒரு சிங்கள நாடாக மாற்றுவதற்காக முயன்று குடாநாட்டைத் துண்டு போட்டு வாளினால் அறுக்கிறான். இதனைக் கண்டு சகிக்காத இந்த மாவீரர்கள் அச்சமின்றி சாவைக் கண்டு கலங்காது தம் இனத்தின் விடிவிற்காக இறுதி வரை போராடியவர்கள்.

தமிழர்களாக நாங்கள் தொடர்ந்து வாழவேண்டுமானால் போராடித்தான் ஆக வேண்டும். வரலாறு இவ்வாறு எங்களுக்கு வழிகாட்டி நிற்கிறது, 1978 ஆம் ஆண்டு முதல் இந்த மண் எங்கள் சொந்த மண்ணாகி விட்டது. அதனை எதிரி முறியடிக்க யாழ். குடா வின் குரல் வளையை நசுக்கி வருகிறான். எதிரியின் படை தமிழ் மண்ணிலே இருக்கும் வரை எங்களுக்கு நிம்மதி ஏற்படமாட்டாது.

மற்றும் யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி· தேன்மொழி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (யோ)

டங்கள் அழிக்கப்பட்டதுடன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் அண்மையில் அநுராதபுரம் நகரிலிருந்து பதினொரு மைல் தொலைவிலுள்ள நாச்சிக்கட்டுவ குடியேற்ற நகருக்கு அண்மையிலுள்ள கலுவில கிராமத்தில் நடந்துள்ளது.

வரட்சி காரணமாக குடிநீர் அற்ற நிலையில் காட்டு யானைகள் கிராமத்திற்குள் [illegible] னையடுத்து இவ் விபரீத சம்பவம் நேரிட்டதாகவும் கூறப்படுகிறது.

வெறி பிடித்த யானைகளின் அட்டகாசத்திலிருந்து தப்புவதற்காக பயந்து ஓடியவர்களில் பலரும் படுகாயம் அடைந்தனர் எனவும் யானைகளால் மிதியுண்டு கிடோகமவைச் சேர்ந்த பிரேமசிறி (40 வயது) கொல்லப்பட்டதாகவும் மேலும் கூறப்படுகிறது

## திணைக்களங்களுக்கு பணம் புதிய முறையில் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான இரு வங்கிகளும், திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு தேவைப்படும் பணத்தை முன் கூட்டியே கொடுத்துவிட்டு பின்னர் திறைசேரியிடமிருந்து அவற்றை அறவிடும் புதிய நடைமுறையொன்று இம் மாதம் முதல் திகதி முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்புதிய நடைமுறையின் கீழ் திறைசேரியின் வட்டிக் கொடுப்பனவுகள் குறைக்கப் படலாம் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

திறைசேரியிடமிருந்து தமக்குத் தேவையான பணத்தைப் பெற்று வங்கியில் வைப்புச் செய்த பின்னரே வங்கிகள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு நிதி வழங்குவதே பழைய நடைமுறை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் புதிய நடைமுறையின் கீழ் வங்கிகள் குறிப்பிட்ட ஒரு தொகையை மட்டுமே திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு வழங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்கவானொலி அமைப்பினால் இலங்கை இராணுவ இலக்காகலாம்

### பொதுசன ஐக்கிய முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

வொய்ஸ் ஒப் அமெரிக்கா எனப்படும் அமெரிக்க வானொலி நிலையத்துடன் சிறிலங்கா அரசுசெய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று பொதுசன ஐக்கிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னணியின் சார்பில் அந்த பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்னா வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் மேலும்தெரிவித்திருப்பதாவது இரணவிலவில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும கட்டுமானப்பணிகள் யாவும் இடைநிறுத்தப் படவேண்டும் என்பதுடன், இந் நிலையம் அமைக்கப்படுவதற்கு ஆயிரக்கணக்கானோர் காட்டும் எதிர்ப்பை அரசாங்கம்அலட்சியம்செய்யக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த அஞ்சல் நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும் தகவல்கள் கிழக்காசியா, தென் ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, ரஷ்யா மற்றும் சீனாவின் தென் பகுதி வரை சென்றடையக்கூடியவை ஆகும். அந்த நாடுகள் விரும்பாத தகவல்களை ஒலிபரப்புவதற்கு எமதுநாடு ஒருதளமாகப் பயன் படுத்தப்படக்கூடாது. எனவும், அதிசக்திவாய்ந்தகருவிகள் பொருத்தப்படும் இந் நிலையம் இராணுவ தேவைகளுக்கு குறிப்பாக இந்து சமுத்திரப் பகுதியில் அமெரிக்க கடற்படைக்கப்பல்கள் நீர்மூழ்கிகள் என்பவற்றிற்கு நேரடி வசதி செய்து கொடுக்கும்என சந்தேகப்படுவதற்கு போதிய காரணம் இருக்கிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், யுத்த காலத்தில் இலங்கை ஒரு இராணுவ இலக்காக மாறும் அபாயம் இதனால் உருவாகுமெனவும், இலங்கை மக்கள் விரும்பும் அணிசாராக் கொள்கைக்கு இது குந்தகமாக அமையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அஞ்சல் நிலையத்தின் மூலம் 60000 கிலோவாட்ஸ் அளவுடைய சக்திவாய்ந்த மின்காந்த மண்டலங்கள் உருவாக்கப்படக்கூடும் என்பதும் இந்த மின்காந்த மண்டலத்தால் சுற்றுப்புற சூழலில் வாழும் மனிதர்களுக்கு உடல் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதுடன் உயிரினங்கள் அனைத்திற்கும் பாதிப்பாகலாம் எனவும் சூற்றுப்புற சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியிருபதுகுறிப்பிடத்தக்கது

### வைத்தியசாலை மூடப்பட்டது

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் சில கடந்த புதனன்று அச்சுவேலி ஆதார வைத்திய சாலைக்கு மிகஅருகில் விழுந்து வெடித்துள்ளன. இதனை அடுத்து இவ் வைத்தியசாலையின் பணிகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.


## கப்டன் அன்பு

[கந்தசாமி கண்ணதசன]

நீங்காத நினைவலைகள்
எம்நெஞ்சில் அலைமோத
கண்ணாவே நீர்எம்மை
விட்டோடிச் சென்றீரோ
கண்ணின் மணிபோல
காத்தோமே உமையெலாம்
தமிழீழம் காக்கவென்று
தரணியிலே பிறந்தீரே
கப்டன் அன்புஎன்ற
காரணப் பெயர்பெற்றீரே
உமதுஉயிர் அழியவில்லை
உமதுபுகழ் அழியாது

உங்கள் நினைவில் வாடும்
அப்பா அம்மா, அண்ணா, மாமா, மாமி அம்மம்மா, சித்தி, சித்தப்பா பெரியப்பா, பெரியம்மா, உடன் பிறவாச்சகோதரர்கள், மச்சான், மச்சியர், நண்பர்கள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (6203)



## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-04

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - கல்முனைப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய-

**வெங்கட் ( - - - )**

யாழ் - தொண்டமானாறு, கெருடாவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான (தந்தை மகன்)

**வேலுப்பிள்ளை செல்லகண்டு,**
**செல்லக்கண்டு சோதிலிங்கம்.**

இதே சம்பவத்தின் போது வெட்டிக் கொல்லப்பட்ட செல்லக்கண்டுவின் மனைவி, இராசமுத்து.

வவுனியாவில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சாளம்பைக்குளத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

யாழ் - மத்திய பேருந்து நிலையம் யாழ் - பூநாறி மரத்தடிப் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-
**கப்டன் தேவன்** (சிவலிங்கம் தமிழ்வாணன் - அப்துல் காசன் வீதி, மூதூர்-திருமலை)

கிளாலிக் கடற்பரப்பில் கடற்படையினரின் சூட்டில் ஒருவரும் மற்றும் சிறிலங்கா விமானப்படையினரின் உலங்குவானூர்தித் தாக்குதல் நடத்தியதில் படகோட்டிகள் இருவர் பலி.

மட்டு - சம்மாந்துறை சவளக்கடை கிராமப்புறப் பகுதியிலுள்ள பாழடைந்த சில வீடுகளில் அரைகுறையாக எரிந்து உருக்குலைந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 75க்கு மேற்பட்ட தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7536]

சிந்தனைக்கு

பெற்ற தாயும், பிறந்த பொன் நாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே

முதுரை

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## காலத்தின் தேவை

கடந்த சில தினங்களாக சிறிலங்கா விமானப் படைகளும், உலங்கு வானூர்திகளும் நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களினால், யாழ். குடாநாடு முழுவதும் அகதி முகாமாகி விடும் அவல நிலை உருவாகி வருவதோடு, காயமடைந்தோர் விடுதியாகவும் மாறிவருகின்றது.

விமானப்படை விமானங்களின் குண்டு வீச்சும், முகாம்களிலுள்ள இராணுவத்தினரின் எறிகணை வீச்சும் கோவில்கள், பாடசாலைகள், பொது இடங்கள் என்ற வேறுபாடுகள் ஏதுமின்றி இடம் பெற்று வருகின்றன. இதன் காரணமாக பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர். ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். குடாநாட்டில் உள்ள சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் முன்னரே அகதிகளாகக் காணப்படும் வேளையில் மேலும், அகதிகள் பெருகுவது என்பது பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

சிறிலங்கா அரசாங்கத்தின் படுகொலைகள் மற்றும் மக்களை விரட்டியடிக்கு நடவடிக்கைகள் யாவும் திட்டமிட்ட நோக்கம் கொண்டவை என்பதில் எதுவித சந்தேகமுமில்லை இந்நிலையில் சிங்கள அரசு இன்னமும் தமிழ் மக்களை எவ்வாறு தன்னுடைய மக்கள் எனக் கூறிக்கொள்ள முடியும்?

ஓர் அரசு என்பது அந்நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமும் கொடுக்கவேண்டும். மாறாக சிறிலங்கா அரசோ, தமிழ் மக்களை தனது மக்கள் எனக் கூறிக் கொள்வதோடு மட்டும் சரி, மிகுதி யாவும் இன ஒடுக்கு முறை நடவடிக்கையே ஆகும். இவ் ஒடுக்கு முறை நடவடிக்கைகளுக்கு அரசாங்கமே தலைமை தாங்குகின்றது. இந்நிலையில், அரசாங்கத்தின் இந் நடவடிக்கையை அரச பயங்கரவாத நடவடிக்கை என்பதில் எதுவித தவறுமில்லை. ஆகையால், இவ் அரசிற்குத் தலைமை தாங்கும் அரசியல்வாதிகள் யாவரையும் 'அரச பயங்கரவாதிகள்' எனக் கூறுதலே பொருத்தப் [illegible]

# ஆபிரிக்காவின் துயரம் தொடர்கிறது; சக்திமிக்க இளமையை ஐரோப்பா திருடியது

ஆபிரிக்கா குறித்து செய்திப் பத்திரிகைகளில் வாசிக்கும் எவரும் வன்முறை, பட்டினி, சட்டமின்மை, ஊழல் ஆகியவை தலைவிரித்தாடுவதையே காண்பர். இயற்கையும் ஆபிரிக்காவை வெறுப்பதாகவே தெரிகிறது. பூமியதிர்ச்சிகள், பஞ்சம், வெள்ளம் ஆகியவை அக் கண்டத்தை அடிக்கடி பாதிக்கின்றன. மக்கள் அழிவுகளால் பாதிக்ப் படுபவர்களாகவே உள்ளனர். மொன்ரோவியா, சுவெட்டோ அல்ஜியர்ஸ், அல்லது மொகாதிசு வீதிகளில் கருகிய அல்லது உருக்குலைந்த சடலங்களையே காணமுடியும்.

ஆபிரிக்கா கண்டம் இன்று ஆளமுடியாத தொன்றாகி உள்ளது. அரசாங்கங்கள் அவை வலதுசாரிகளாகவோ, இடதுசாரிகளாகவோ, இராணுவமாகவோ அல்லது ஜனநாயகமானதாகவோ எதுவாக இருப்பினும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் திறமையற்றதாகவே அவை உள்ளன.

ஆபிரிக்க நாடுகளின் இன்றைய நெருக்கடிகளுக்கான காரணங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமானவையாகும், சிக்கலானவையாகும். ஆனால் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ஜனநாயகத்தையும், அபிவிருத்தியையும் ஊக்குவிக்கவும் அரசாங்கங்கள் தோல்வி கண்டிருப்பதே முக்கிய காரணங்களாகும். இதன் விளைவாக ஆபிரிக்க நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் ஓரங்கட்டப் பட்டுள்ளன. இந்நாடுகளின் தலைவர்கள் இனிமேலும் தாங்க முடியாத சுமையைத் தாங்கியுள்ளனர்.

ஆபிரிக்காவுக்கு ஐரோப்பியர்கள் சென்றகாலம் முதல் தொட்டு இப்பிரச்சினைகள் இருந்து வருவதாக சில அவதானிகள் கருதுகின்றனர். அடிமைத்தனம் மூலம் ஆபிரிக்காவின் சக்திமிக்க இளமையை ஐரோப்பா திருடியதாக அவர்கள் கூறுகின்றனர். அதன் மூல வளங்களைச் சுரண்டினர் பல தரப்பட்ட பூர்வீகக் குடிகளை தன்னிச்சையாக ஒரே நாட்டினுள் திணித்தனர் இதனால் இன்று எல்லை மோதல்கள்; குழு யுத்தங்கள்; குடியேற்ற நாடுகளை அடக்கியாண்டதும், சுரண்டியதுமே பிரிட்டனின் சுபீட்சத்துக்கு ஒரு காரணம் எனக் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல எனப் பத்திரிகையாளரான ஜோன் நிமோ கூறுகின்றார். தனது சொக்லேட் கைத்தொழிலுக்கான மூலப் பொருளானகொக்கோ உற்பத்திக்கு பிரிட்டன் கானாவில உற்சாகமளித்தது என அவர் கூறுகின்றார்.

சுதந்திரமடைந்த பின்னர் பல ஆபிரிக்க தலைவர்கள் தமது மக்களுக்கு சுபீட்சத்தையும், தன்னம்பிக்கையையும், ஜனநாயகத்தையும் கொண்டு வருமென தாங்கள் கருதிய பல வழிகளைப் பின்பற்றத் தொடங்கினர். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

சர்வதேச நாணய சபை உலக வங்கி, பல்தேசிய நிறுவனங்கள், மேற்கு நாட்டு அரசாங்கங்கள் ஆகியவை வழங்கிய ஆலோசனைகள் வியாபிக்கும் ஆபிரிக்க பொருளாதார நோய்களைக் குணப்படுத்த முடியவிலலை. உண்மையிலேயே அவை ஆபிரிக்காவின் 'நோய்களை' மேலும் மோசப்படுத்தின. சர்வதேச நாணய சபையின் வற்புறுத்தல்கள், ஆபிரிக்க நாடுகளை கடுமையான சமூக நலன்கள் குறைப்புக்கு இட்டுச் சென்றன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பொருளாதாரத்தின் ஏனைய முக்கிய துறைகள் ஆகியவற்றிற்கான மான்யங்கள் நீக்கப்பட்டன வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இக் கொள்கைகளின் சுமையையும் தாங்க வேண்டியுள்ளது.

கைத்தொழில் மய நாடுகளிலிருந்து பெருக்கெடுத்து வரும் மூலவளங்களைக் காட்டிலும் ஆபிரிக்காவின் மொத்த நிதிக் கை மாற்றுக்கள் அதிகம் என்னும் அளவுக்கு ஆபிரிக்காவின் வெளிநாட்டுக் கடன்கள் இன்று உயர்ந்துள்ளன.

மறுசீரமைப்பு திட்டங்கள் மூலம் கடன் நெருக்கடியைத் தீர்க்கும் யதார்த்த பூர்வ சாத்தியக் கூறுகளும் இல்லை

கைத்தொழில்நாகரிகமயத்துக்கு மத்தியில் கல்வி அறிவின்மையும்தொழில்பயிற்சியின்மையும் ஆபிரிக்காவைஉதவியற்றதாக்கி உள்ளன. தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் இணைந்து செல்ல இவ் இரு துறைகளிலும் அளிக்கப்படும் ஊக்குவிப்புகள் ஆபிரிக்கக்கண்டத்திற்கு உதவும் சுரண்டலுக்கான ஒரு மார்க்கமாகஅல்லாது அபிவிருத்தியில் ஒரு பங்காளியாக ஆபிரிக்காவை சர்வதேச சமூகம் உற்றுநோக்குவதும் தேவையானதாகும்.

ஆபிரிக்கத் தலைவர்கள் மிகுந்த பயனுள்ளவர்களாகவும், சுயநலமற்றவர்களாகவும், நல்லாட்சியைத் தொடர ஒழுங்குள்ளவர்களாகவும், இருப்பின் இது தொடர்பாக சாதகமான பெறுபேறுகளை அடையலாம். கொடுங்கோன்மையிலும் செல்வம் குவிப்பதிலும் மூழ்கிய ஊழலான தலைவர்களையே ஆபிரிக்கா மிக நீண்டகாலமாகக் கண்டு வந்துள்ளது. மேற்கு உலகில் பெரும் செல்வத்தை ஆபிரிக்கத் தலைவர்கள் குவிக்கும் அதே வேளையில் தமது நாடுகளை அவர்கள் பொருளாதார சீர்கேடுகளில் மூழ்கச் செய்தனர்.

மேற்கு நாட்டு நலன்கள் சிலவற்றால் தூண்டப்பட்ட இத் தலைவர்கள் அரசியலிலிருந்து மக்களை அந்நியப்படுத்தி தமது சொந்த வலயங்களை பேணிக்கொண்டனர். தமக்குத்தாமே ஆயுட்கால ஜனாதிபதிகள் என்ற நிலையையும் உருவாக்கிக் கொண்டனர். ஆபிரிக்கா பல்லாண்டுகளாக எதிர்நோக்கிவரும் துயரக் கதை இதுவாகும்.

எவ்வாறாயினும் புதிய தலைமுறைத் தலைவர்கள் இப்பொழுது ஆட்சியில் இருப்பதாலும், நடந்து விட்ட தவறுகள் திருத்தப்படுவது தேவை என உணரப்பட்டிருப்பதாலும் இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து மீள முடியும்.

— நன்றி: இன்டர்கோ பிரஸ்

## பொலிசாரின் வெறியாட்டத்தால் ஓட்டமாவடியில் வீடு, கடைகள் சேதம்

[கொழும்பு]

ஓட்டமாவடி பகுதியில் பொலிசார் நடத்திய வெறியாட்டத்தில் பத்து வீடுகளும், பன்னிரண்டு கடைகளும் பலத்த சேதம் அடைந்துள்ளன.

வாழைச்சேனை பொலிசார் ஓட்டமாவடியில் நிகழ்த்திய இந்த வெறியாட்டத்தின் போது ஆறு பொதுமக்களும் காயமடைந்தனர். சேதமாக்கப்பட்ட கடைகளில் இருந்தும், வீடுகளில் இருந்தும் பொலிசார் கொள்ளையடித்தும் உள்ளனர். இச் சம்பவங்கள் கடந்த புதனன்று இரவு இடம்பெற்றன இது பற்றி மேலும் தெரியவருவதாவது, புதன்கிழமையன்று காலையில் சோதனைச் சாவடியில் பணியில் இருந்த பொலிசார் புதினப் பத்திரிகை விநியோகிக்கும் வாகனமொன்றில் இருந்து பத்திரிகை எடுக்க முற்பட்டதாகவும், வாகனச் [illegible] திக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து இரவுநேரத்தில் சிவிலுடையுடன் முகமூடி அணிந்த பொலிசார் ரயில் பாதை வழியாக நடந்து வந்து ஓட்டமாவடியில் எதிர்ப்பட்ட பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் கடைகளையும், வீடுகளையும் சேதப்படுத்தி கொள்ளையடித்ததாகவும் கூறப்படுகின்றது. வீதியில் வந்த வாகனங்களும் சேதமாக்கப்பட்டன. கலகச் சம்பவங்களை அவதானித்த பொலிசார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனவும் இதையடுத்து கலகத்தில் ஈடுபட்ட பொலிசார் பொலிஸ் நிலையத்திற்குள் தப்பி ஓடியதாகவும், சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஓட்டமாவடி பகுதியெங்கும் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

## அரசாங்கம் புரிவதே மோசமான பயங்கரவாதம்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் 'பயங்கரவாதப்' பிரச்சினைதான் உண்டு என்று கூறுபவர்கள் மிக மோசமான பயங்கரவாத நடவடிக்கைக [illegible]

போதும் பிரச்சினைக்கு தீர்வு தரப்போவதில்லை. புலிகளை வெற்றிகொண்டுவிட்டோம் என்ற ஒரு மாயையை சிங்கள மக்கள் மத்தியில் [illegible]

## 50 லட்சம் ரூபா பெறுமதியான கெரோயின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு மோதர பகுதியில் போதைப் பொருள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிசார் சுமார் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான நான்கரைக்கிலோகிராம் கெரோயினைக் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து களவாக வள்ளம் ஒன்றின் மூலம் கடத்தி வரப்பட்ட இந்த கெரோயின் மோதர பகுதி கடற்கரையில் தரையிறக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பில் புதிய நடைமுறை அமுலாகும்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வேலை பார்க்கும் இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான [illegible] படுத்தப்படவுள்ளன.

அத்துடன் வேலை நீக்கம் செய்தல், காப்புறுதி, ஊழியர் இறந்தால் நஷ்டஈடு என்பன பற்றியும் ஆராயப்படும் என் [illegible]

பது பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

சிறிலங்கா அரசாங்கத்தின் படுகொலைகள் மற்றும் மக்களை விரட்டியடிக்கு நடவடிக்கைகள் யாவும் திட்டமிட்ட நோக்கம் கொண்டவை என்பதில் எதுவித சந்தேகமுமில்லை இந் நிலையில் சிங்கள அரசு இன்னமும் தமிழ் மக்களை எவ்வாறு தன்னுடைய மக்கள் எனக் கூறிக்கொள்ள முடியும்?

ஓர் அரசு என்பது அந் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமும் கொடுக்கவேண்டும். மாறாக சிறிலங்கா அரசோ, தமிழ் மக்களை தனது மக்கள் எனக் கூறிக் கொள்வதோடு மட்டும் சரி, மிகுதி யாவும் இன ஒடுக்கு முறை நடவடிக்கையே ஆகும். இவ் ஒடுக்கு முறை நடவடிக்கைகளுக்கு அரசாங்கமே தலைமை தாங்குகின்றது. இந்நிலையில், அரசாங்கத்தின் இந் நடவடிக்கையை அரச பயங்கரவாத நடவடிக்கை என்பதில் எதுவித தவறுமில்லை. ஆகையால், இவ் அரசிற்குத் தலைமை தாங்கும் அரசியல்வாதிகள் யாவரையும் 'அரச பயங்கரவாதிகள்' எனக் கூறுதலே பொருத்தப்பாடானதாகும்.

இந் நிலையில் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகவும் விழிப்பாகவும் இருக்கவும், நடமாடவும் பழகிக்கொள்ள வேண்டும். சிங்கள விமானப் படை விமானங்கள் எவ்வளவு தமிழரைக்கொல்ல முடியுமோ அந்தளவிற்கு கொன்றொழிக்க வேண்டும் என்ற ரீதியில் பிணம் தின்னும் கழுகுகள் போன்று திரிகின்றன.

யுத்தம் குறித்தும்பாதுகாப்புக்குறித்தும் முன்னரே பலதடவை விடுதலைப்புலிகள் மக்களுக்கு அறிவுறுத்தல் செய்துள்ளனர். தற்பொழுதும் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், இதனை மக்கள் கடைப்பிடித்தால் பெருமளவு அழிவுகளை தவிர்க்க முடியும். ஆனால், சங்கத்தானையில் கடந்த மாத இறுதியில் பதுங்கு குழியில் இருந்தபோது பதுங்கு குழிக்கு அருகில் குண்டு விழுந்து வெடித்ததில் 20 பேர் கொல்லப்பட்டமையானது துரதிர்ஷ்டவசமானது.

ஆகையினால், தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட படுகொலையில் இருந்து தப்பி வாழப் பழகிக்கொள்வதோடு, சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடவும் வேண்டும். ஏனெனில், சிங்களப் பேரினவாதத்தின் அடிப்படைக் குறிக்கோள் தமிழ் மக்களை வெளியேற்றுதல், அல்லது அழித்தல்என்பதே ஆகும். இந் நிலையில் இன்று உயிர் தப்பிக் கொண்டாலும் சிங்களப் பேரினவாதம் உங்களை துரத்திக் கொண்டே இருக்கும். எனவே உங்கள் பாதுகாப்பையும், உங்கள் சந்ததிகளின் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள பேரினவாதத்தை விரட்டியே ஆகவேண்டும். அதற்காகப் போரிடுவது தவிர்க்க முடியாதது. இது காலத்தின் தேவையாகும்.

அவ்வாறு இல்லாது போரைத் தவிர்த்துஒதுங்கிக்கொள்வோமேயானால், தமிழ் இனம் தனது தாயகத்தை இழப்பதோடு, தமது சுதந்திரத்தையும் இழந்து அடிமைகளாகவே வாழவேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாதது. தனது தாயகத்தை விட்டு வெளியேறிய யூத இனம் மீண்டும் தாயகத்தைப் பெற எவ்வளவு தியாகங்களைச் செய்தது என்பதையும், யூதர்களிடம் தமது தாயகத்தை இழந்த பாலஸ்தீனம் தனது தாயகத்தைப் பெற எவ்வளவு அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகின்றது என்பதோடு, அவர்கள் உலகில் படும் அல்லல்களும் தமிழர் தாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணங்கள் ஆகும்.

# ஓட்டமாவடியில் வீடு, கடைகள் சேதம்

[கொழும்பு]

ஓட்டமாவடி பகுதியில் பொலிசார் நடத்திய வெறியாட்டத்தில் பத்து வீடுகளும், பன்னிரண்டு கடைகளும் பலத்த சேதம் அடைந்துள்ளன.

வாழைச்சேனை பொலிசார் ஓட்டமாவடியில் நிகழ்த்திய இந்த வெறியாட்டத்தின் போது ஆறு பொதுமக்களும் காயமடைந்தனர். சேதமாக்கப்பட்ட கடைகளில் இருந்தும், வீடுகளில் இருந்தும் பொலிசார் கொள்ளையடித்தும் உள்ளனர். இச் சம்பவங்கள் கடந்த புதனன்று இரவு இடம்பெற்றன இது பற்றி மேலும் தெரியவருவதாவது, புதன்கிழமையன்று காலையில் சோதனைச் சாவடியில் பணியில் இருந்த பொலிசார் புதினப் பத்திரிகை விநியோகிக்கும் வாகனமொன்றில் இருந்து பத்திரிகை எடுக்க முற்பட்டதாகவும், வாகனச் சாரதி அதற்கு மறுப்பு தெரிவித்ததையடுத்து, அச்சாரதி தாக்கப்பட்டதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது அங்கு கடமையிலிருந்த முஸ்லிம் பொலிஸ் கான்ஸ்டபிளான ஓமார் என்பவரும் சக பொலிஸ்காரர்களால் தாக்கப்பட்டு காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து இரவுநேரத்தில் சிவிலுடையுடன் முகமூடி அணிந்த பொலிசார் ரயில் பாதை வழியாக நடந்து வந்து ஓட்டமாவடியில் எதிர்ப்பட்ட பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும் கடைகளையும், வீடுகளையும் சேதப்படுத்தி கொள்ளையடித்ததாகவும் கூறப்படுகின்றது. வீதியில் வந்த வாகனங்களும் சேதமாக்கப்பட்டன. கலகச் சம்பவங்களை அவதானித்த பொலிசார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனவும் இதையடுத்து கலகத்தில் ஈடுபட்ட பொலிசார் பொலிஸ் நிலையத்திற்குள் தப்பி ஓடியதாகவும், சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஓட்டமாவடி பகுதியெங்கும் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

# அரசாங்கம் புரிவதே மோசமான பயங்கரவாதம்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் 'பயங்கரவாதப்' பிரச்சினைதான் உண்டு என்று கூறுபவர்கள் மிக மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளில்ஈடுபடுகின்றார்கள்என்பது வருந்தத்தக்கதாக உள்ளது'' இவ்வாறு ஈ.பி.ஆர்.எல் எவ். இயக்கத்தைச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் பி.பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இப்பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில், தற்போது அரசு மேற்கொண்டுவரும் யுத்த நடவடிக்கைகள் ஒரு போதும் பிரச்சினைக்கு தீர்வு தரப்போவதில்லை. புலிகளை வெற்றிகொண்டுவிட்டோம் என்ற ஒரு மாயையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தவே இது உதவும். அரசு தொடர்ந்தும் மக்கள் மீது தாக்குதல்கள் நடாத்துவது உட்பட பல்வேறு மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது. எனவே தற்போதைய அரசுக்கு பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசுவதற்கு எந்த அருகதையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

...வதேச சமூகம் உற்றுநோக்குவதும் தேவையானதாகும்.

ஆபிரிக்கத் தலைவர்கள் மிகுந்த பயனுள்ளவர்களாக ...இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து மீள முடியும்.

— நன்றி: இண்டர்கோ பிரஸ்

# 50 லட்சம் ரூபா பெறுமதியான கெரோயின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு மோதர பகுதியில் போதைப் பொருள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிசார் சுமார் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான நான்கரைக்கிலோகிராம் கெரோயினைக் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து களவாக வள்ளம் ஒன்றின் மூலம் கடத்தி வரப்பட்ட இந்த கெரோயின் மோதர பகுதி கடற்கரையில் தரையிறக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பில் புதிய நடைமுறை அமுலாம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலும் மற்றும் வெளிநாடுகளிலும் வேலை பார்க்கும் இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் புதிய நடைமுறை ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

புதிய நடைமுறையின்கீழ் வேலை முறைகள், மாதாந்த சம்பளம், வேலை நேரங்கள், விடுமுறை நாட்கள், உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி, போக்குவரத்து வசதி என்பன முதலிலேயே உறுதிப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் வேலை நீக்கம் செய்தல், காப்புறுதி, ஊழியர் இறந்தால் நஷ்டஈடு என்பன பற்றியும் ஆராயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாராட்டு

இளைப்பாறிய அதிபர் செ. சோதிப்பெருமாள் அவர்களின் சேவைநலம் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று இணுவில் மத்திய கல்லூரியில் கலாநிதி சபா.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

# புலிகளின் போராட்டத்திற்கு உலகத் தமிழ் மாநாடு ஆதரவு

(பேர்ளின்)

தமிழீழத் தனியரசை அமைப்பதற்கான தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், அப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளையும் முழுமனதுடன் ஆதரிப்பதாக பேர்ளினில் நடைபெற்ற அனைத்துலக தமிழ்மாநாடு ஏகோபித்த தனது தீர்மானத்தில் தெரிவித்தது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற இம் மாநாட்டில் மேலும் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள தமிழ் மக்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாகத் திருப்பி அனுப்புவதை உடனே நிறுத்துமாறும் இந்திய அரசை வேண்டிக் கொண்டதுடன் அந்த மக்களின் பிள்ளைகளின் கல்விக்கு உத்தரவாதம் அளிக்குமாறும் அது கேட்டுக் கொண்டது.

பாலஸ்தீனத்தைப் போல தமிழீழம் சார்பான பிரதிநிதிகளை வெளி நாடுகளில்நியமிக்கவும் ஐ. நா, சபையில் தமிழீழப் பிரதிநிதியை ஏற்கவும் ஐ. நா. வும் அதன் உறுப்பு நாடுகளும் உதவவேண்டுமெனவும் பேர்ளினில் நடைபெற்ற அனைத்துலக தமிழர்மாநாடு கேட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் சிறுபான்மையான முப்பது இன மக்களைச் சிறப்புரிமையினராக ஏற்றுக்கொண்டது போல, இங்கு வாழும் தமிழீழ மக்களையும் சிறுபான்மையினராக அங்கீகரித்து அனைத்து உதவிகளையும் தந்து ஆதரிக்குமாறு ஐரோப்பிய நாடுகளை அது கேட்டுக் கொண்டது.

## பத்துப் பெண்கள் உயிரிழப்பு

(சென்னை)

பழநியில் தனியார் நிறுவனமொன்று ஏற்பாடுசெய்திருந்த இலவச உடை வழங்கும் விழாவில் கலந்துகொள்ள வந்தவர்களிடையே ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி பத்துப் பெண்கள் உயிரிழந்தனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைமேலும் அதிகரித்து இருக்கலாம் என்று திண்டுக்கல் அண்ணா மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கூறியுள்ளார்.

# படையினரை நோக்கி மக்கள் கல் வீச்சு

## மாஸ்கோ நகரில் சம்பவம்

ரஷ்யாவில் அதிபர்பொறிஸ் யெல்ட்சினை எதிர்க்கும் நூற்றுக்கணக்கான மக்களோடு பாதுகாப்புபடையினர் மாஸ்கோ நகரில் மோதியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஓரிடத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் படையினரை நோக்கி கல்லெறிவதில் ஈடுபட்ட போது பொலிசார் விண்ணைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

ரஷ்யாவில் அரசியல் நெருக்கடிகள் தோன்றியிருக்கும் இச் சூழ் நிலையில் முதலாவதாக இடம்பெற்ற அசம்பாவிதங்கள் இவையென ஏஜென்சிச் செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பொதுமக்களை உறுதியுடன் கிளர்ந்தெழும்படி யெல்ட்சினின் பிரதான அரசியல் எதிரியான அலெக்ஸாண்டர் ருஷ்சோவ் கூறியிருப்பது இங்கு குறிப்பிடக்கூடியது.

## சோமாலியாவில்

# அமெரிக்கப்படையினர் தாக்குதல் ஒன்பது குடிமக்கள் பலி

(மொகாடிஸ்யூ)

சோமாலியாவில் நேற்று முன்தினம் ஐ. நா வின்அமைதிப்படையில் உள்ள அமெரிக்க உலங்கு வானூர்தியொன்று பொதுமக்கள் குடியிருப்பு ஒன்றின் மீது நடாத்திய தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மொகமட் பாரா அய்டீட்டின் துருப்புக்கள் தங்கியிருந்த முகாம் ஒன்றின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் ஆனால் அது இலக்குத்தவறிவிட்டதாகவும் சோமாலியாவிலுள்ள அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

# தேர்தல் சட்ட திருத்தத்திற்கு பாரதீய ஜனதா கண்டனம்

[டில்லி]

இந்தியத் தேர்தல் ஆணையகம் பல உறுப்பினர்களைக் கொண்டதாக மாற்றப்பட்டமைக்கு பாரதீய ஜனதாக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐந்து மாநிலங்களிலும், டில்லியூனியன் பிரதேசத்திலும் தேர்தல் கால அட்டவணை அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் சட்டத்தில் எந்தவித மாற்றத்தையும் செய்திருக்கக் கூடாது என்று குறிப்பிட்டுள்ள பாரதீய ஜனதாக் கட்சி குடியரசுத் தலைவர் பிறப்பித்திருக்கும் அவசர சட்டங்களுக்கும் கண்டனம் தெரிவித்துள்ளது. பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர் எல்.கே. அத்வாணி வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மழை நீரை சேமிப்போம**

**விளைபொருளைப்பெருக்குவோம்**

ஈழநாதம்

# வடக்குகிழக்குஇராணுவமுகாம்களில் 2224தமிழிளைஞர்கள் தடுத்துவைப்பு

## மனித உரிமைகள் பணிக்குழு தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியில் இருக்கும் இராணுவ முகாம்களில் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்து நான்கு தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பணிக்குழுவின் தலைவரான ஜே. எப். டி. சூசா வெளியிட்டிருக்கும் வருடாந்த அறிக்கையில் மேலும் வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள பதின்மூன்று இராணுவ முகாம்களில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மட்டக்களப்பிலுள்ள இராணுவத் தடுப்பு முகாமிலேயே இவர்களில் அநேகமானோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பு இராணுவத் தடுப்பு முகாமில் மட்டும் 982 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் இதனைவிட திருக்கோணமலை முகாம்களில் 141 பேரும் ஏழு தீவுகளிலும் இருக்கும் முகாம்களில் 16பேரும் வன்னி முகாம்களில் 60 பேரும் அம்பாறை முகாம்களில் 27 பேரும் மட்டக்களப்பு இராணுவச் சிறைச்சாலையில் 142 பேரும் சம்மாந்துறை முகாமில் 50 பேரும் திருக்கோணமலை இராணுவச் சிறைச்சாலையில் 248 பேரும் வாழைச்சேனை முகாமில் 7 பேரும் தாண்டிக்குளம் முகாமில் 78 பேரும் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பணிக்குழுவின் அதிகாரிகள் இந்த முகாம்களுக்கு விஜயம் செய்தனர் எனவும் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் பெண்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர 1545பேர் நாட்டின் பல பகுதிகளிலும் இருக்கும் புனர்வாழ்வு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் மகசீன், களுத்துறை தடுப்பு முகாம்களில் 952 தமிழிளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதைவிட இக் குறிப்பிட்ட ஒரு வருட காலப் பகுதிக்குள் காணாமற்போனவர்கள் தொடர்பாக 2351 புகார்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடைத்தாள் சேகரிப்பு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் பொதிகளை இன்று பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் சேகரிக்க சேகரிப்பாளர்கள் இணைப்பு நிலையங்களுக்கு வருகை தர விருப்பதால் இணைப்புநிலைய அலுவலர்கள் நிலையத்தில் நின்று உதவும் வண்ணம் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## நள்ளிரவிலும் விநியோகம்

(தென்மராட்சி)

இடம்பெயர்ந்த மக்களுக்கு கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் நள்ளிரவு வேளையிலும் மக்களுக்கு விளக்கு வைத்து நிவாரணத்தை வழங்கிவருகின்றனர். பல சிரமத்திற்கு மத்தியிலும் வாகனங்களில் இருந்து சங்கங்களுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு மக்களுக்கு வழங்கிவருகின்றனர். ஊழியர்கள் இரவு பகல் பாராது சேவையை செய்து வருகின்றனர். (86)

# இஸ்ரேலின் நடவடிக்கைக்கு யாசிர் அரபாத் எதிர்ப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்டுவரும் தேடுதல் வேட்டை தொடர்பாக, பாலத்தீன விடுதலை இயக்கம் கண்டித்து இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபினுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

தலைவர் யாசிர் அரபாத் எழுதியுள்ள இக்கடிதத்தில் காஸாப் பகுதியில் பதின்மூன்று வீடுகள் சேதமாக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இத் தேடுதலின்போது இஸ்லாமிய ஹமாத் இயக்கத்தை சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதாகவும், றொக்கட் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினரின் இந் நடவடிக்கைகளால் சமாதான உடன்பாட்டிற்கு பாலத்தீனியர்களின் ஆதரவைப் பெறுவது சிரமமானதாகலாம் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## சந்திப்பு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான செய்முறைப் பரீட்சை தொடர்பான சில ஆலோசனைகள் வழங்கவிருப்பதால் சகல விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்கள் இன்று மு.ப.10.30 மணிக்கு யாழ். கல்வித்திணைக்களத்திற்கு தவறாது சமுகம் கொடுக்கும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# கருணாநிதியை கொல்ல புலிகள் சதியாம்

(சென்னை)

என்னைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிடுகிறார்கள் !என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப்பதவியை திரு. வை. கோபாலசாமியிடம் ஒப்படைக்கும் நோக்குடனே தன்னைக் கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# மூன்று கோட்டங்களிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

புலோப்பளை - அல்லிப்பளை பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்க நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்று கோட்டங்களிலும் நடைபெற்றது.

வீரவேங்கை வெங்கடேஸ்வரனின் உருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்து வரப்பட்டு மந்துவில் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு இவ் உருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டு நினைவுக்கல் நாட்டப்பட்டது.

2ஆம் லெப். செல்வம், கப்டன் சாந்தன் ஆகியோரது உருவப்படங்கள் அவர்களது இல்லத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு நெல்லியடி சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. வடமராட்சி

குயிலி, லெப். அன்பழகி, 2ஆம் லெப். காரணி, வீரவேங்கை துவாரகா ஆகியோரது உருவப்படங்கள் நேற்று முன்தினம் மாலை சித்தன் கேணி அமெரிக்கன்மிசன் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் இவை அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குஎடுத்துச்செல்லப்பட்டது அங்கு வித்துடல்கள் விதைக்கப்பட்டதுடன் உருவப்படங்களுக்கு நடுகற்களும் நாட்டப்பட்டன.

## மெய்வல்லுநர் போட்டி

[கொழும்புத்துறை]

நவாலி தெற்கு வசந்தா பாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இன்று பி. ப. 4. 00மணிக்கு சிறுவர்களின் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறும்.

இவ் விழாவிற்குப் பிரதம

## சிறுவர் பாடசாலை ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலைய சிறுவர் பாடசாலை ஆண்டுவிழா இன்று பிற்பகல் 2.00மணிக்கு நிலைய விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் திரு. தி. ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் தலைவர் திரு. வை. செகராஜசிங்கம் கௌரவ விருந்தினராகப் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளார். (24)

யுனிசெப்

வழங்கி வருகிறது.

ஆனால் இவ்உதவிகள் உரிய முறையில் போதிய அளவில் மக்களுக்குக் கிடைப்பதில்லையாம். இதனிடையேவடபகுதியில் உள்ள மருத்துவ மனைகளின் நிலை குறித்து அறிவதற்காக யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி

# வோய்ஸ் ஒவ் அமெரிக்க ஒப்பந்தம் வெளியிடப்படும்

## சட்டத்தரணி ஒருவர் அறிவிப்பு

இரணவெல அமெரிக்க வானொலி நிலையம் அமைப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் இன்று மக்களுக்கு வெளியிடப்படும் என சட்டதரணி எஸ். ஜீ. புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்புக்குழுவின் சட்டதரணிகள் முன்னிலையில் இதனை அம்பலப்படுத்தப் போவதாக அவர் தெரிவித்தார். இதேவேளை இது தொடர்பாக ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்களை மக்கள் முன்னிலையில்தெளிவு படுத்த அரசாங்கம் தவறியதைத்தொடர்ந்து இவ் ஒப்பந்தத்தை தான் இரகசிய முறையில் எடுத்துள்ளதாகவும் இதனை இன்று வெளியிடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சி பயணிகளுக்கு பொது நிறுவனங்கள் உதவி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக கிளிநொச்சியில் தங்கியுள்ள பயணிகளுக்கு பொது நிறுவனங்கள் மதிய போசனத்தை வழங்கி வருகின்றன.

நேற்று முன்தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மதிய போசனத்தை வழங்கியது நேற்று செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஒக்ஸ்பாம் நிறுவனம் 1000 பேருக்குமதிய போசனத்தை வழங்கியது.

இன்று சர்வோதயம் மதிய போசனத்தை வழங்கவுள்ளது. தமிழர் புனர் வாழ்வுக் கழகம், மனித முன்னேற்ற நடுநிலையம், தென்னிந்திய திருச்சபை, அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் ஆகியனவும் உதவிகளை வழங்கவுள்ளதாக தெரியவருகிறது. குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது

# திறந்தவெளி பாடசாலை; மடு மாணவர் அவதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு திறந்தவெளியில் கடந்த இரு வருடங்களாக மர

உயர்ஸ்தானிகராலயத்தின் பராமரிப்பின் கீழ் இப் பகுதியில் உள்ள மாணவர்கள் மரங்களுக்குக் கீழ் நிலத்தில்

# திறந்தவெளிபல்கலைமூலம் எவரும் பட்டம் பெறலாம்

## கலைப்பீடாதிபதி உரை

எதுவித அடிப்படைக் கல்வித் தராதரமுமில்லாதவர்கள் கூட கொழும்பில் இயங்கி வரும் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மூலம் கல்வி கற்று சகல துறைகளிலும் வெளியேறி வருகிறார்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருடைய மகனும், கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக்கழக தலைவரது மகளும் கொழும்பிலுள்ள திறந்த வெளிப் பல்கலைக்கழகத்திலேயே தமது கல்வியைக் கற்று வருகிறார்கள் எதுவித அடிப்படைக் கல்வித்தராதரமுமில்லாதவர்கள். கூட திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆரம்ப சோதனையில் சித்தியடைவதன் மூலம் பட்டதாரி கற்கை நெறிகளை கற்கக்கூடிய வாய்ப்பு கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக்கழகம் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் இயங்காமல் பெரும்பாலும் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது என யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலசுந்தரம் பிள்ளை நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கலைப்

கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் இக்கற்கை நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தலைமையில் ஆரம்பமான இவ் வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி திரு. நா. பாலசுந்தரம்பிள்ளை ஆரம்ப உரையையும், யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா சிறப்புரையையும் ஆற்றினார்கள்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றும் பே து, யாழ். திறந்த வெளிப் பல்கலைக்கழகம் தமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதில்லை என கொழும்பு திறந்தவெளிப் பல்கலைக் கழகத் தலைவர் என்னிடம் தெரிவித்தார். கிராமத்தில் கல்வி கற்றவர்கள் நகரத்தை நோக்கி இடம் பெயர்ந்து செல்வதனால் கிராமங்கள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. தகுந்த தலைமைத்துவம் இல்லாதது கிராமங்களிலுள்ள பெரும் குறைபாடாகும். எனவே சனசமூக நிலையங்கள் மூலம் இக்கற்கை நெறியைப் பயில வந்துள்ள நீங்கள் இது தொட

சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்க நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்று கோட்டங்களிலும் நடைபெற்றது.

வீரவேங்கை வெங்கடேஸ்வரனின் உருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்து வரப்பட்டு மந்துவில் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு இவ் உருவப்படம் எடுத்துச் செல்லப்பட்டு நினைவுக்கல் நாட்டப்பட்டது.

2ஆம் லெப். செல்வம், கப்டன் சாந்தன் ஆகியோரது உருவப்படங்கள் அவர்களது இல்லத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு நெல்லியடி சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நினைவுக்கல் நாட்டப்பட்டது.

வீரவேங்கை காவேரி, கடற்புலி வீரவேங்கை வீமன் ஆகியோரது வித்துடல்களும், வீரவேங்கை ஜனார்த்தனி, லெப். ரது உருவப்படங்கள் நேற்று முன்தினம் மாலை சித்தன்கேணி அமெரிக்கன்மிசன் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் இவை அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குஎடுத்துச்செல்லப்பட்டது அங்கு வித்துடல்கள் விதைக்கப்பட்டதுடன் உருவப்படங்களுக்கு நடுகற்களும் நாட்டப்பட்டன.

## மெய்வல்லுநர் போட்டி

[கொழும்புத்துறை]

நவாலி தெற்கு வசந்தாபாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இன்று பி. ப. 4. 00மணிக்கு சிறுவர்களின் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறும்.

இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தலைவர் திரு. வை. செகராஜசிங்கம்கலந்து கொள்ளவுள்ளார்.

திரு. ச. பரமேஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறும். (24)

பாடசாலை ஆண்டுவிழா இன்று பிற்பகல் 2.00மணிக்கு நிலைய விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் திரு. தி. ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் தலைவர் திரு. வை. செகராஜசிங்கம் கௌரவ விருந்தினராகப் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளார். (24)

## யுனிசெப்

வழங்கி வருகிறது.

ஆனால் இவ்உதவிகள் உரிய முறையில் போதிய அளவில் மக்களுக்குக் கிடைப்பதில்லையாம். இதனிடையேவடபகுதியில் உள்ள மருத்துவ மனைகளின் நிலை குறித்து அறிவதற்காக யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி திருமதி றிஸ்பா எட்ஸ்பேர்ட் யாழ் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அரிசி

ளின்படி ஒருகிலோவெள்ளைப் பச்சையரிசியின் கொள்விலை ரூ.16.00 ஆகவும் விற்பனை விலைரூ. 18.00 ஆகவும்நாட்டு அரிசி கொள்விலை ரூ. 16.50 ஆகவும் விற்பனை விலை ரூ. 18.50 ஆகவும்கோறாஅரிசி கொள்விலைரூ.16.50 ஆகவும் விற்பனை விலை ரூ. 18.50 ஆகவும் நிர்ணயம்செய்யப்பட்டுள்ளதாக செயலக புனர்வாழ்வு பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## தென்மராட்சி

வானூர்தியொன்று மூன்றுக்கு மேற்பட்ட கிறனைட்டுகளை வீசியது மக்கள் பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்திருந்தால் பெருமளவு சேதம் தவிர்க்கப்பட்டது

இதேவேளை சிறிலங்கா விமானப்படை புக்காரா விமானம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் குண்டுவீச்சை நடாத்தியது.

இரவு 11.15 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று வீதியால் சென்ற வாகனம் மீது கிறனைட் தாக்குதலை மேற்கொண்டது. இவை வேம்பிராய் பகுதியில் வீழ்ந்தன. எனினும்சேதம்எதுவுமில்லை. (86)

## துப்பாக்கி

தலை பகுதிகளில் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தது.

அதன் பின்னர் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்களை சுற்றி வட்டமிட்ட உலங்கு வானூர்தி மண்டைதீவு சிறிலங்கா ராணுவ முகாமில் தரை இறங்கிச் சென்றது. [21]

சட்டதரணிகள் முன்னிலையில் இதனை அம்பலப்படுத்தயிடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சி பயணிகளுக்கு பொது நிறுவனங்கள் உதவி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக கிளிநொச்சியில் தங்கியுள்ள பயணிகளுக்கு பொது நிறுவனங்கள் மதிய போசனத்தை வழங்கி வருகின்றன.

நேற்று முன்தினம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மதிய போசனத்தை வழங்கியது நேற்று செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஒக்ஸ்பாம் நிறுவனம் 1000 பேருக்குமதிய போசனத்தை வழங்கியது.

இன்று சர்வோதயம் மதிய போசனத்தை வழங்கவுள்ளது. தமிழர் புனர் வாழ்வுக் கழகம், மனித முன்னேற்ற நடுநிலையம், தென்னிந்திய திருச்சபை, அகதிகள் புனர் வாழ்வுக்கழகம் ஆகியனவும் உதவிகளை வழங்கவுள்ளதாக தெரியவருகிறது. குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது

# திறந்தவெளி பாடசாலை; மடு மாணவர் அவதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு திறந்தவெளியில் கடந்த இரு வருடங்களாக மரநிழலில் இருந்தே மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு கட்டட வசதிகளோ இருப்பிடவசதிகளோ இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

அகதிகளுக்கான ஐ. நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் பராமரிப்பின் கீழ் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் மரங்களுக்குக் கீழ் நிலத்தில் இருந்தே இக் கல்வியை மேற்கொள்கின்றனர். கடந்த 27ஆம் திகதி நண்பகல் மடுப் பகுதியில் கடும் மழை பெய்ததை அடுத்து மாணவர்கள் அனைவரும் மழையில் நனைய வேண்டி ஏற்பட்டது.

# தீப்பிளம்பாக சீறி வந்து தரையில்வீழ்ந்து வெடித்தது

### ஹெலி தாக்குதலில்காயமடைந்தவர் தெரிவிப்!

(வடமராட்சி)

வானில் இருந்து தீப்பிளம்புகளுடன் வந்து கொண்டிருந்த குண்டுகள் தரையில் விழுந்து வெடித்தபோது வீதியில் வந்தவர்கள் இரத்தம்பீறிட்டு பாய்ந்த நிலையில் சரிந்து விழுந்தனர்.

வல் வெட்டித்துறையில் உலங்குவானூர்திபி.ப 5-30 மணியளவில் மேற்கொண்ட றொக்கட் தாக்குதலின் போது காயமடைந்த இராமசாமி சிவலிங்கம் என்பவரின் உறவினர் வடமராட்சி செய்தியாளருக்கு இவ்வாறு விபரித்தார்.

அவர் மேலும் விபரிக்கும் போது, வீதியில் தங்கள் தேவைகளின் நிமிர்த்தம் மக்கள் நடந்து சென்றுகொண்டிருந்த போது வானில் மூன்று உலங்குவானூர்திகள் சென்று கொண்டிருந்தன. திடீரென ஓர் உலங்குவானூர்தியிலிருந்து தீச்சுவாலையுடன் குண்டுகள் வந்து விழுந்து வெடித்ததில் எனது உறவினரும் அவருடன் வந்தவர்களும் காயமடைந்தனர்.

வல்வெட்டித்துறைச் சந்திக்கும் வேம்படிக்கும் இடையில் நடந்த இச் சம்பவத்தின் போது காயமடைந்து இரத்த வெள்ளத்தில் கிடந்த இவர்களை மீட்கச் சென்றபோது செல்வராசாபவுணன் அல்லது சூரியகுமார் குற்றுயிரில் இருந்தார். இவர்களை வாகனங்களில் ஏற்றி பருத்தித்துறை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றதும் குற்றுயிரில் இருந்தவர் இறந்துவிட்டார்.[யோ]


## மின் வழங்கல்

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கும் சேவை நடைபெற்று வருகின்றது. மின்சாரம் தேவைப்படுவோர் 15-10-93க்கு முன் எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். மேல் அதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மின் வாரியம்**

தமிழீழ வானொலித் தொடர்பகம்,
பழைய பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். [சி-7525]


னும், கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக்கழக தலைவரது மகளும் கொழும்பிலுள்ள திறந்த வெளிப் பல்கலைக்கழகத்திலேயே தமது கல்வியைக் கற்று வருகிறார்கள் எதுவித அடிப்படைக் கல்வித்தராதரமுமில்லாதவர்கள். கூட திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆரம்ப சோதனையில் சித்தியடைவதன் மூலம் பட்டதாரி கற்கை நெறிகளை கற்கக்கூடிய வாய்ப்பு கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக்கழகம் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் இயங்காமல் பெரும்பாலும் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது என யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலசுந்தரம்பிள்ளை நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கிராமிய மேம்பாடு ஓர் அடிப்படைக் கற்கை நெறி தொடர்பான ஆரம்ப வைபவத்தில் உரை ஆற்றும் போது தெரிவித்தார்.

யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கலைப்பீடாதிபதி திரு. நா. பாலசுந்தரம்பிள்ளை ஆரம்ப உரையையும், யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா சிறப்புரையையும் ஆற்றினார்கள்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றும் போது, யாழ். திறந்த வெளிப் பல்கலைக் கழகம் தமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதில்லை என கொழும்பு திறந்தவெளிப் பல்கலைக் கழகத் தலைவர் என்னிடம் தெரிவித்தார். கிராமத்தில் கல்வி கற்றவர்கள் நகரத்தை நோக்கி இடம் பெயர்ந்து செல்வதனால் கிராமங்கள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. தகுந்த தலைமைத்துவம் இல்லாதது கிராமங்களிலுள்ள பெரும் குறைபாடாகும். எனவே சனசமூக நிலையங்கள் மூலம் இக்கற்கை நெறியைப் பயில வந்துள்ள நீங்கள் இது தொடர்பான அறிவைப் பெற்று சனசமூக நிலையங்களுக்குட்பட்ட கிராமங்களில் வாழ்பவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக திகழவும், அதன் மூலம் கிராம மக்களது சமூக கலாசார அபிவிருத்திக்கு உறுதுணையாகவும் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (17)

# மட்டு. பொதுநிறுவனங்களை கட்டுப்படுத்த முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறிலங்கா அரச பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் குணவர்த்தன இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அங்குள்ள 20ற்கு மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன. இவ்வாறு வழங்கப்படும் உதவிகள் சரியான முறையில்கிடைப்பதில்லை எனக் கூறியே அவற்றைத் தனது கட்டுப்பாட்டினுள் சிறிலங்கா பாதுகாப்பு இணைப்பதிகாரி கொண்டு வந்துள்ளார். இதன்படி பிரிகேடியர் குணவர்த்தன தலைமையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொண்ட மீளாய்வுக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழு குணவர்த்தன தலைமையில் கூடி எடுக்கும் முடிவுகளுக்குஅமையவேஅரச சார்பற்ற நிறுவன பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஒரே பகுதி மக்களுக்கே தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்படுவதாகவும் அதனை தடுக்கும் முகமாகவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் குணவர்தன கூறியுள்ளார். இந்நடவடிக்கையை அடுத்து அங்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமாக இயங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

## பாக்கி பணம் வழங்க கோரிக்கை

அரச ஓய்வூதியர்கட்கு வழங்கப்பட்டவிசேட வாழ்க்கைப் படி ரூபா260 தொடர்பாக சகல ஓய்வூதியர்கட்கும் பாக்கிப் பணம் ரூபா 16,900 வழங்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அரசஊழியர்கட்கு சென்ற 1988-ம் ஆண்டு ஜனவரியில் வழங்கப்பட்ட பொழுது அதேபோல் ஓய்வூதியர்கட்கும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பயிற்சியும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சிறுவர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஐந்து நாள் பயிற்சியும், கருத்தரங்கும், மீட்டல் பயிற்சியும் இடம்பெறவுள்ளது. [24]

# பாலஸ்தீன தீவிரவாதிகளை இஸ்ரேல் தேடுகிறது

[ஜெருசலேம்]

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸாநிலப்பகுதியில் இஸ்ரேலியத் துருப்பினர் பெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். மேற்கு காஸாப் பகுதியின் சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதோடு பெருமளவு இராணுவத்தினர் கனரக ஆயுதங்கள் மற்றும் டாங்கிகள் சகிதம் இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் பாலத்தீன உடன்பாடு ஏற்பட்ட பின்னர் இஸ்ரேலியத் துருப்பினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது இதுவே முதல் தடவை என்பதும், பாலத்தீனிய கடும்கோட்பாட்டாளர்களை தேடியே இத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

# நிலநடுக்கத்திற்குத் தப்பி விபத்தில் மரணம்

[மணிலா]

நிலநடுக்கத்தில் உயிர்தப்பி வீதி ஓரத்தில் சிறு குடிசை அமைத்து வாழ்ந்து வந்த மக்கள் மீது இரசாயனப் பொருள்களை ஏற்றிவந்த லொறி ஒன்று மோதியதில் 18 பேர் பலியாகினர்.

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிர் தப்பியே வீதி ஓரமாக இவர்கள் குடிசை அமைத்து தங்கியிருந்தனர். நிலநடுக்கப் பகுதியில் தொற்று நோய்கள் பரவாதிருக்க இரசாயன மருந்துகளைத் தெளிப்பதற்கான பொருள்களை கொண்டுவந்த லொறி இவர்கள் மீது மோதியமை குறிப்பிடத்தக்கது.

## அடையாளம் காணப்பட்டது

[யாழ்ப்பாணம்]

விடத்தல்பளையில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படையினரின் உலங்குவானூர்தி நடாத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன் ஒருவனின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது. யாழ். வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி சடலம் த. கமலதாஸ் (வயது 13) என்பவரது என்று தெரிய வந்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.